மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து 30 கி.மீ. தொலைவில் தரங்கம்பாடி கடற்கரை அமைந்துள்ளது. கடல் அலைகள் இசைபாடுவதுபோல் அமைந்த இடம் என்பதால் இந்த கடற்கரைக்கு தரங்கம்பாடி என்ற பெயர் வந்தது. இங்கு பழமை வாய்ந்த மாசிலாமணிநாதர் கோயில் உள்ளது.

தரங்கம்பாடி கடற்கரையில் ஏப்ரல்,மே, ஜூன் மாதங்களில் ஓசோன் காற்று அதிக அளவில் வீசுகிறது. இதனால், இப்பகுதிக்கு அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். தரங்கம்பாடி கடற்கரை ஓசோன் செறிவு மண்டலமாக அறியப்படுகிறது.

புயல், மழை பாதிப்புகளை கண்காணித்து செயல்பட

தஞ்சாவூர் மாவட்டத்தில் 66 குழுக்கள் அமைப்பு

திருவாரூர் மாவட்டத்தில் 176 இடங்கள் தொடர் கண்காணிப்பு

■ தஞ்சாவூர்/ திருவாரூர்/ மயிலாடுதுறை

டிட்வா புயல், மழை பாதிப்புகளை கண்காணித்து செயல்பட தஞ்சாவூர் மாவட்டத்தில் 66 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் கூறியது: தஞ்சாவூர் மாவட்டத்தில் புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை பணிகளை துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக, மாவட்ட, கோட்ட, வட்ட மற்றும் சரக அளவில் தொடர்புடைய துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து 66 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 21 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளிட்ட 275 நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன. 4,500 முதல்நிலை பணியாளர்கள் மற்றும் ஆப்த மித்ரா திட்டத்தின்கீழ் 300 முதல் நிலை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தயார்நிலையில் உள்ளனர்.

புயல், கனமழை தொடர்பான புகார்களை மட்டும் பொதுமக்கள் ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறையை 04362-1077, 93450 88997 மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களை 04362-238033(தஞ்சாவூர்), 0435-2430101 (கும்பகோணம்), 04373-237247(பட்டுக்கோட்டை) ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

திருவாரூர் மாவட்டத்தில் 176 பகுதிகள் வெள்ள பாதிப்பு பகுதிகளாக கண்டறியப்பட்டு, தொடர் கண்காணிப்பில் உள்ளன. மீட்பு பணிகளுக்காக 327 பொக்லைன், 322 ஜெனரேட்டர்கள், 352 மின் மோட்டார்கள், 586 மரம் அறுக்கும் கருவிகள், 39 படகுகள் தயார் நிலையில் உள்ளன.

ஆறுகள், வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டால் சரிசெய்ய நீர்வளத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை சார்பில் 34,000 மணல் மூட்டைகள், சவுக்கு மரங்கள் பல்வேறு இடங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், மழை, வெள்ள பாதிப்புகளை 04366 1077, 04366 226623, 90439 89192, 93456 40279 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என ஆட்சியர் வ.மோகனசந்திரன் அறிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில்...

மயிலாடுதுறை ஆட்சியர் அலுவலகத்தில் டிட்வா புயலை யொட்டி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மயிலாடுதுறை மாவட்ட கண்காணிப்பு அலுவலரான கவிதா ராமு தலைமையில், ஆட்சியர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த் முன்னிலையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், ஆட்சியர் கூறியது: ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் மழை பாதிப்பு தொடர்பாக 04364-222588 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

வேளாங்கண்ணி திறந்தவெளி நெல் சேமிப்பு கிடங்கில் ஆய்வு

■ நாகப்பட்டினம்

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி பேரூராட்சி பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக திறந்தவெளி நெல் சேமிப்பு கிடங்கில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆட்சியர் ஆகாஷ் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட 2,600 டன் நெல் மூட்டைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என அண்ணாதுரை தெரிவித்தார்.

முன்னதாக, நாகூர் பட்டினச்சேரி மீனவ கிராம கடற்கரை பகுதியில் கடலின் அலை மற்றும் கடற்கரை பாதுகாப்பு தடுப்புகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் உமாமகேஸ்வரி, உதவி இயக்குநர் மீன்வளத் துறை ஜெயராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உடல் தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

■ காரைக்கால்

காரைக்கால் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் உடற்கூறுயியல் துறை சார்பில், நெடுங்காட்டில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முழு உடல் தானம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி மோகன்ராஜ் தலைமை வகித்தார். காரைக்கால் ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் சரண்யா, விஜய் கிஷன், குமரன், ரெஜினா ஆகியோர், உடல் தானம் எப்படி செய்ய வேண்டும்.

உடல் தானம் மருத்துவ மாணவர்கள் கல்வி மேம்பாட்டுக்கு எப்படி உதவுகிறது என்பது குறித்து விளக்கிப் பேசினர்.

தருமபுரம் 26-வது ஆதீன கர்த்தரின் குருபூஜை விழா

■ மயிலாடுதுறை

மயிலாடுதுறை தருமபுரத்தில் உள்ள சிறப்புமிக்க சைவ மடமான திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் 26-வது குருமகா சந்நிதானமாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். 1971-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை 48 ஆண்டுகள் ஞானபீடத்தில் அமர்ந்து அருளாட்சி செய்தார்.

உலகெங்கும் சமயம் வளரவும், சமூகம் மலரவும், வேதஆகம புராண இதிகாச திருமுறை சாத்திரம் தழைக்கவும், சைவமும், தமிழும் தழைத்தோங்கவும் பங்காற்றி, அறப்பணிகளும் செய்தருளினார். இவர், 2019-ம் ஆண்டு டிச.4-ம் தேதி பரிபூரணம் அடைந்தார். அவரது திருமேனி ஆதீன திருமடத்தில் உள்ள ஆனந்தபரவசர் பூங்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அங்கு அவரின் வழித்தோன்றலான தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் முயற்சியில் குருமூர்த்தம் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் குருபூஜை விழா நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்று நடைபெற்ற 6-ம் ஆண்டு குருபூஜை விழாவையொட்டி தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருக்கூட்டத்து அடியவர்கள் படைசூழ எழுந்தருளி குருமூர்த்தத்துக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் செய்து வழிபாடு நடத்தினார்.



குருபூஜை விழாவில் ஒதுவாருக்கு பொற்கிழி, நற்சான்றிதழ் வழங்கி கவுரவித்த தருமபுரம் ஆதீனம்.

தொடர்ந்து, சிதம்பரம் இர.நிருத்தநாத ஓதுவாருக்கு ரூ.10 ஆயிரம் பொற்கிழி, நற்சான்றிதழ் வழங்கி கவுரவித்தார். மதியம் மகேஸ்வர பூஜை நடைபெற்றது. குருபூஜையையொட்டி கருத்தரங்கம், திருமுறை விண்ணப்பம், பட்டிமன்றம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில், திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் சபாபதி தம்பிரான் சுவாமிகள், தருமபுரம் ஆதீன திருநாவுக்கரசு தம்பிரான், திருஞானசம்பந்த தம்பிரான், மாணிக்கவாசக தம்பிரான், சொக்கலிங்க தம்பிரான் உள்ளிட்ட தம்பிரான் சுவாமிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

அடிப்படை வசதிகள் செய்துதர கோரி நம்பியார் நகர் மீனவ கிராம மக்கள் மறியல்

■ நாகப்பட்டினம்

நாகை நம்பியார் நகர் மீனவ கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்துதர வலியுறுத்தி நேற்று நாகை ஆட்சியர் அலுவலகம் முன்பு மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகை நம்பியார் நகரில் தரமான சாலை, புதை சாக்கடை, மழைநீர் வடிகால், வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும். மீனவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க வேண்டும். நம்பியார் நகரில் உள்ள மீன்பிடி துறைமுகத்தில் டீசல் பங்க், ஐஸ் கட்டி நிலையம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

போராட்டத்துக்கு, அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன் எம்எல்ஏ, பாஜக மாவட்டச் செயலாளர் விஜேந்திரன், தவெக மாவட்டச் செயலாளர் சுகுமாறன் உள்ளிட்டோர் ஆதரவு தெரிவித்து பங்கேற்றனர். பின்னர், போராட்டத்தில் ஈடுபட்ட மீனவ கிராம பஞ்சாயத்தார் ஆட்சியர் ஆகாஷை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, அடிப்படை வசதிகளை உடனடியாக சரிசெய்து தருவதாகவும், துறைமுகத்தை மேம்படுத்துவது போன்ற திட்டங்கள் அரசு கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அனைத்து கோரிக்கைகளுக்கும் ஆட்சியர் உறுதியளித்தால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம் என கூறி, கிராம மக்கள் நாகை-காரைக்கால் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அதிகாரிகள் தலைமையில் நடைபெறும் சமரச கூட்டத்தில் பேசியபிறகு, அடுத்த கட்ட போராட்டத்தை நடத்துவது குறித்து முடிவு செய்யப்படும் என மீனவ பஞ்சாயத்தார் கூறியதால், அனைவரும் கலைந்து சென்றனர்.

இதனால், நாகை- நாகூர் சாலையில் 5 மணிநேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ESAF
ESAF SMALL FINANCE BANK
REGD. OFFICE: ESAF Bhavan, Mannuthy, Thrissur- 680 651, Kerala.

தங்கநகை ஏல அறிவிப்பு

ஈஎஸ்ஏஎப் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க உடன் உறுதிசெய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளை/கள் கடன் பெறுபவர்களால் மீட்கப்படாமல், மீண்டும் மீண்டும் நினைவூட்டியும் மற்றும் அறிவிப்புகளை கொடுத்து இருந்தாலும் கூட, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் தகவலை தெரிந்துகொள்வதற்காக இதன்மூலம் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது:

ஏலம் விடப்படும் தேதி : 09-12-2025 நேரம் : 11 am to 6 pm
நஏலம் விடப்படும் இடம் : இ-ஏலம் மூலம்
விபரங்களை : https://gold.matexnet.org/
Contact Number: 9944171360 / 9843312694

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்த்து மற்றும் இ-ஏலத்தின் முழு விவரங்களுடன் இ-ஏலத்திற்காக ஏலம் கேட்பவராக பதிவு செய்வதற்கு தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கு வருகைதாருங்கள்

BRANCHES & LOAN ACCOUNT NUMBERS

ALANGULAM: 63250001263325, 75240003598122, **ANAMALAI**: 63250001232985, 1241307, 1254163, 1269665, 1322965, **ANDIPATTI**: 63240000627838, 63250001223572, 1261659, **ANNUR**: 63250000452677, **ANTHIYUR**: 63240000531058, 0538695, 0633726, 0635273, 75240003553627, **ARANI**: 75250001651808, **ARUPPUKOTTAI**: 63250001293828, **BATLAGUNDU**: 63250001224390, 1253005, 1302564, **BHUVANAGIRI**: 63250001196211, 1245850, 1246238, **CHENNAI - MOGAPPAIREAST**: 63250001217734, 1219420, 1270652, **CHENNAI - VELACHERY**: 63250001249523, **CHENNAI - VILLIVAKKAM**: 63250001247126, 1247806, 1248845, 1261599, 1267558, 1281321, 1318874, 1319352, 1325480, 75250001146789, **CHENNAI-PURASAWALKAM**: 63250001214449, 1298709, 1299017, 1300007, 1304310, **COIMBATORE - R S PURAM**: 63250001251928, 1260321, 75250001158756, 1159615, **COLACHEL**: 75240003755607, **CUDDALORE**: 63250001196771, 1199005, 1209689, 1217374, 1311086, 1317485, 1329423, **CUMBUM**: 63250001214929, 1267138, 1289836, **DHARAPURAM**: 63240000652970, 63250001207583, 1241577, **DHARMAPURI**: 63250001196461, **DINDIGUL**: 75240003684560, **ELAVAMALAI**: 63250001269835, 1270392, 1283117, 1328525, **ELAYAMUTHUR**: 63250001226336, **ELUMATHUR**: 75240003562870, **ERODE**: 63250001254583, 75250001638124, **GUDALUR**: 63250000793015, 1184744, 1202132, 1242165, 1248515, 1264084, 1265572, 1265762, 1267068, 1267088, 1279735, 1290124, 1300927, 1316397, **KANCHIPURAM**: 75250001754745, **KANJAPPALLY**: 63250001239452, 1272518, 1297171, 1299767, 75240003517876, **KANYAKUMARI**: 63250001254693, 1256979, 1261999, 75250001104029, **KARIYAMPALAYAM**: 63250001271710, 1277059, 1303012, **KATPADI**: 63250001244592, **KATTANKULATHUR**: 63250000865490, 1254483, 1272958, **KEELKATALAI**: 75250001781713, **KOTTAGIRI**: 63240000642899, 63250001260701, **KUNIYAMUTHUR**: 63250001216825, 1218582, 1234261, 1236587, 1259484, 75240003564766, 3737922, **MADHURANTAKAM**: 63250001258935, 1298689, 1317105, **METTUPALAYAM**: 63250001208951, 1235489, 1247856, 1256619, 1304640, 1329723, **MINJUR**: 63250001267398, **MOTTANUTHU**: 63240000599449, 63250001257617, 1257727, 1266360, 75240002975430, **NAGAPATTINAM**: 63250001201394, 1212273, 1215577, 1245380, 1312365, **OOTY**: 63250001216585, 1218542, 1234511, 1263925, 75250001747468, **PALANI**: 63250001259664, 1290894, 1305198, 75240003660815, **PALAYAMKOTTAI-TIRUNELVELI**: 63250001195133, 1196881, 1237085, 1242855, 1249443, 1256719, 1265902, 1279095, **PANRUTI**: 63250000894455, 1218432, 1272188, **POLLACHI**: 63250001254793, 1256839, 1317515, 1323344, 75240002744495, **POOMALAIKUNDA**: 63250001259434, 1317445, **PUDUKKOTTAI**: 75250001175024, 1201426, **RAMANATHAPURAM**: 63250001209619, 1317985, **REDDIARCHATTIRAM**: 63250001291682, 1303322, 1320479, **ROYAPURAM**: 63250001225948, 1252296, SALEM: 63250001248905, **SANARPATTI**: 63250001230878, **SATHYAMANGALAM**: 63250001266330, 1318354, **SINGANALLUR (ONDIPUTHUR)**: 63250001262067, 1279195, **THAKKALAI**: 63250001302184, **THALAKKARAI**: 63250001261009, **THANJAVUR**: 63250001253685, 1324972, **THIRPPARAPPU**: 63250001296373, **THIRUVALLUR**: 63250001259344, 75250001226359, 1228615, **THIRUVANNAMALAI**: 63250001249773, 1264484, 75250001189367, **THONDAMUTHUR**: 63250001258245, 1317815, **THOOTHUR**: 63250001325670, 75250001777461, **THUDIYALUR**: 63250001270202, 1307865, 1326798, **TINDIVANAM**: 63250001196481, 1227205, 1239572, 1256679, 1271310, 75250001651118, **TIRUCHIRAPALLI**: 63250001233693, **TIRUKALUKUNDRAM**: 63250001329063, 75240003551601, **TIRUKKOYILUR**: 63250001239342, 1319382, 75240003516248, 3700332, **ULUNDURPETTAI**: 63250001300047, 1319682, 75240003526789, 3529554, **UNJAMPATTY**: 63250001205536, **UTHIRAMERUR**: 63250001224340, 75240004559249, **VADAPUDUR**: 63250001231546, 1231616, 1238294, 1243924, 1266100, 1275543, 1316247, **VEDASANDUR**: 63250001258165, 1279535, 1286812, 1298179, **VELLANAIPATTI**: 63250001237605, 1270062, **VILUPPURAM**: 63240000645234, 63250001091558, 1219610, 1223882, 1244092, 1308443, **PUDUCHERRY**: 63250001300477.

மொத்த நிலுவைத் தொகையை செலுத்தி ஆபரணங்களை மீட்டெடுக்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளில் (ஏலம் விடும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பு) அல்லது அதற்கு முன்பு இதை செய்யலாம்.

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலம் கேட்பவர்கள் தங்களின் கேஒய்சி (KYC) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட அமைப்பு/நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி எண் கட்டாயமாகும். ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஏலம் கேட்பவர்கள் ரூ.50,000 மொத்த தொகையை ஈஎம்டி ஆக டெபாசிட் செய்ய வேண்டும்.

திருச்சூர் கையொப்பம்
தேதி: 25-11-2025 அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடுபவர்

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE
I, BRINDHA MUTHUSAMY W/O.SARAVANAN, residing at No.15, Vijayamandaba Street, Manampuchavadi Thanjavur Dist, Pin - 613001, Tamilnadu Shall henceforth be known as **BRINDHA MURARI SARAVANAN**
BRINDHA MUTHUSAMY

NAME CHANGE
I, MOHAMMED SUHAIL ASIR S/O, KASANAPERALI KATTUKARUCHAI, D.O.B : 22.08.1994, P.O.B : Udumalpet, Native District : Thiruppur, currently residing at No-45, 4th Cross, Arulanandha Nagar, Thanjavur - PO & Dist, Pin - 613007, Tamilnadu Shall henceforth be known as **MOHAMED SUHAIL ASIR S/O.KASANAPERALI KATTUKARACHAI**
MOHAMMED SUHAIL ASIR S/O, KASANAPERALI KATTUKARUCHAI

NAME CHANGE
I, RAJARETHINAM KIRUSHNASAMY S/O.KIRUSHNASAMY, D.O.B: 25.07.1979, P.O.B: Neravy, Native District: Karaikal, Puducherry-State, residing at Plot No.3, S R Nagar Extension, Keezhamanal, Neravy - Po, Karaikal - Dt - Puducherry - State, PIN: 609604 Shall henceforth be known as **RAJARATHINAM RAJAGOPAL KRISHNASAMY S/O.KRISHNASAMY**
RAJARETHINAM KIRUSHNASAMY S/O.KIRUSHNASAMY

NAME CHANGE
I, VARATHARAJU S/O.KALIYAN, D.O.B: 05/04/1961, residing at O.No : G57, N.No : 4-4, Ambethkar Nagar, Lalgudi, Kallakudi, Trichy - 621652, Tamilnadu Shall henceforth be known as **VARATHARAJAN**
VARATHARAJU

வீடு / நிலம்

அலுவலகம் விற்பனை

வீடு விற்பனைக்கு
திருச்சி No. 1 டோல்கேட் பிச்சாண்டார் கோவில் அருகில்
IInd SALE, Ground Floor, Appartment, 630 ச.அடி
தெற்கு வாசல் கொண்ட Appartment விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு: 97906 32477

பொது

பொது அறிவிப்பு

அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை
நெ.16, 3வது குறுக்கு தெரு, திருநகர், மணச்சநல்லூர் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. வெள்ளைன்துரை அவர்களின் மகள் விமலா தேவி ஆதார் அட்டை எண்.5447 3092 4904 சுமார் 62 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் ஆவணம் எண். 294/1974 பதிவு செய்யப்பட்ட தேதி 21.02.1974 தொலைந்து விட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது கைபேசி எண்ணிற்கு 8012202856 அல்லது மேற்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
விமலா தேவி

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.16, தரைத்தளம், பிரீமியர் ஏவியோன், நியூ ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம், தமிழ்நாடு - 612001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழுக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	13.11.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1628218860000003 & 1628210090000004 1.M/s. துர்கா தேவி டெக்ஸ்டைல்ஸ் 2.Mr. கிஷோர் குமார் 3.Mrs.நீத்து வினோத் புலோர்	(i) 28.06.2022 (ii) 24.06.2022 அன்றுள்ளபடி ₹ 45,39,297/- (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சத்து மும்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்) (ii) அடையாளூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 14.06.2025	₹ 84,23,275.57 (ரூபாய் எண்பத்து நான்கு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்)	₹ 48,32,000/- (ரூபாய் நாற்பத்து எட்டு லட்சத்து மும்பத்து இரண்டாயிரம் மட்டும்)	₹ 4,83,200/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்)

சொத்து விவரம்: கும்பகோணம் பதிவு மாவட்டம் மற்றும் கும்பகோணம் சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட T.S.எண்.1023 & 1024, **கதவு எண்.23, 23A, நகராட்சி 7வது வார்டு, முட்டாளி தெரு, எண்.2, மேலகாவேரி தெரு, கும்பகோணம் டவுன், தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 27 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 75 அடி, **ஆக மொத்தம் 2025 சதுர அடி (188.13 சதுர மீட்டர்) நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட குடியிருப்பு கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: தெரு, கிழக்கு: சுவாமிநாதன் வீடு மற்றும் பின்புறம், மேற்கு: தெரு, தெற்கு: ரஹிம் வீடு மற்றும் பின்புறம்.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 24.12.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 23.12.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	22.12.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்
தேதி: 29.11.2025

யூனியன் பேங்க் ஆப் இந்தியா Union Bank of India
இந்திய அரசு உடமையாக்கப்பட்டது A Government of India Undertaking
சாரங்கபாணி கிழக்கு வீதி கும்பகோணம் கிளை : TS எண்.759/1, 763/B3, வார்டு எண்.6, பாத்திமாபுரம், 60 அடி ரோடு, கும்பகோணம்–612001

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு பிற்சேர்க்கை -IX

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல 30 நாள் விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **யூனியன் பேங்க் ஆப் இந்தியா** வின் (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது (கீழே கண்ட விபரப்படி). கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள விபரப்படியாகும்.

கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : கடன்தாரர் : திரு. M.மகேந்திரன், த/பெ. மாரிமுத்து, எண்.110, மேற்கு வீதி, இன்னம்பூர், கும்பகோணம் – 612 303.
நிலுவைத் தொகை : **ரூ.63,44,464.